ISSN : 2455 - 0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018

IIJIF

INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR

DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301

office@iijif.com
https://iijif.com/

This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE

OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]

THIS CERTIFICATE IS PRESENTED TO

Inam: International E-Journal of Tamil Studies

e-ISSN: 2455-0531

The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.

Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321

MANAGER

ஆ.மணி
அ.மோகனா
இரா.இராஜா
கி.சங்கரநாராயணன்
ப.திருஞான சம்பந்தம்
மு.நாகராஜன்
விஸ்வேஸ்வரன்
மௌ.அஸ்கர் அலி
மா. உமாமகேஸ்வரி
சு.பேச்சியம்மாள்
கு.தனலெட்சுமி
அ.பிரீதா
மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி
கு.சரஸ்வதி
இரா.வைதேகி
சி.யுவராஜ்
ந.மாலதி
இரா.பிரசன்னா
ப.மணிகண்டன்
ரா.ராஜராஜன்
நா.மலர்விழி
சே.செந்தமிழ்ப்பாவை
பெ.குபேந்திரன்
பெ.ராஜா
மா.ஆசியாதாரா
வி.மல்லிகா

இல.இராஜதுரை
க.தேவி
மீ.கோமதி
க.ரேவதி
வீ.மீனாட்சி
ம.பெட்ரிக் ஜெபராஜ்
ப.புவனேஸ்வரி
இரா.நித்யலெட்சுமி
சே.முனியசாமி
அ.அனேஜா
வி.வசந்தா
அ.புவியரசு
தி.நிரஞ்சனி
மா.யோகராஜ்
யே.டிலானி
மொ.சபீதாபானு
கா.தினேஷ்
ஆ.ஷைலா ஹெலின்
ம.சந்துரு
வசந்தமணி
பி.விஜி
த.சத்தியராஜ்
மா.பரமசிவன்

*Inam* *ISSN : 2455 - 0531*

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

*An Internationally Refereed e_ Journal of Tamil Studies*


## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)



## இதழாக்கமும் வெளியீடும்

*முனைவர் த.சத்தியராஜ்*
கோயமுத்தூர்
*09600370671*
*inameditor@gmail.com*
*www.inamtamil.com*

மே 2018 **மலர் : 4** **இதழ் : 13**

*May 2018 Volume IV Issue 13*


# உள்ளே ...

தொகுதி - ஒன்று

## தமிழ்ச் செவ்வியல்


**ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?**
முனைவர் ஆ.மணி | 4

**பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்**
முனைவர் அ.மோகனா | 12

**யாப்பியலும் கணக்கியலும்**
முனைவர் இரா. இராஜா | 19

**வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்**
முனைவர் கி.சங்கர நாராயணன் | 26

**கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்**
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34

**முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்**
முனைவர் மு.நாகராஜன் | 40

**திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை**
விஸ்வேஸ்வரன் | 45

**தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு**
திரவியராசா நிரஞ்சினி | 53

**சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்**
முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59

**பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்**
முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64

**இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை**
முனைவர் சு.பேச்சியம்மாள் | 69

**பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்**
கு. தனலட்சுமி | 75

**பழந்தமிழரின் போர் முறைகள்**
அ.பிரீதா | 79

**முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு**
மு.தமிழ்முல்லை | 83

**பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்**
ரெ. அருணா தேவி | 87

**சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்**
முனைவர் கு.சரஸ்வதி | 92

**எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)**
இரா. வைதேகி | 96

...

**UGC APPROVED JOURNAL NO: 64244**




**அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்**

சி. யுவராஜ் | 99

**அகநானூற்றின் கட்டமைப்பு**

ந. மாலதி | 104

**குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்**

இரா. பிரசன்னா | 107

**நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்**

ப.மணிகண்டன் | 111

**குறுந்தொகை உணர்த்தும் அறம்**

முனைவர் ரா. ராஜராஜன் | 115

**நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்**

முனைவர் நா. மலர்விழி | 119

**சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்**

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

**சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்**

பெ.ராஜா | 126

**வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை**

முனைவர் மா.ஆசியாதாரா | 130

**தொகுதி - இரண்டு**

## காப்பிய இலக்கியம்

**ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்**

முனைவர் வி.மல்லிகா | 136

**நளன்கதை கூறும் இலக்கியங்கள்**

Rajadurai.L | 140

## பக்தி இலக்கியம்

**ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை**

க. தேவி | 144

**அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்**

முனைவர் மீ. கோமதி | 148

**ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்**

க.ரேவதி | 152

## தற்கால இலக்கியம்

**'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்**

முனைவர் வீ.மீனாட்சி | 155

**சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு**

ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

**ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு**

ப. புவனேஸ்வரி | 163

**தினமணி இதழும் தலையங்கமும்**

முனைவர் இரா. நித்யலட்சுமி | 167

## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

**முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்**

சே.முனியசாமி | 171

**பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்**

அரியரெத்தினம் - அனேஜா | 182

**சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு**

வினாயகமூர்த்தி - வசந்தா | 192

**சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்ககாலம்**

முனைவர் அ.புவியரசு | 203

**செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு**

திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

**விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்**

யேசுஐயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

**வள்ளலார் வகுத்த இனம்**

கா. தினேஷ் | 230

**சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்**

ஆ. ஷைலா ஹெலின் | 233

**வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்**

யேசுஐயா டிலானி | 238

**ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்**

Shandru Mariyadas | 254

**பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்**

முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

**கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்**

பி.விஜி | 269

## நூல் மதிப்பீடு

**சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை**

த.சத்தியராஜ் | 277

**வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்**

முனைவர் மா.பரமசிவன் | 286

...

மதிப்பிடப்பெற்றது

# கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்



*VIJI.P*
*Research Scholar*
*Ori & Mss Library*
*University of Kerala*
*09496411153, 08281471857*
*vijimarayoor@gmail.com*

கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்ட வளாகம், கீழ்த்திசைச் சுவடியியல் நூலகமானது இந்தியாவில் உள்ள சுவடியியல் நூலகங்களில் 65,000க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளைக் கொண்ட முதன்மையான நூலகம் என்ற பெருமையைக் கொண்டது. இப்பெருமைக்கு முதன்மைக் காரணமாக அமையக்கூடியவர்கள் திருவிதாங்கூர் அரச குடும்பங்களும், அவர்களால் இத்துறையில் நியமிக்கப்பெற்ற பொறுப்பாளர்களும், இயக்குநர்களுமே ஆவர். இத்துறையின் வரலாற்றை எடுத்துரைக்கும் விதமாகவே இக்கட்டுரை அமைகின்றது.

**துறை வரலாறு**

திருவிதாங்கூர் அரச குடும்பத்தினர் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சியில் சிறந்து விளங்கினர். 1903இல் அரசராக இருந்த ஸ்ரீமூலம் திருநாள் அவர்கள் வடமொழியில் பண்டிதரான T.கணபதி சாஸ்திரி அவர்களைச் சுவடிகளைப் பதிப்பிக்க நியமித்ததோடு, 1908இல் ‘வடமொழிப் பொறுப்பாளர் நிறுவனம்’ எனும் தனி நிறுவனத்திற்கு முதல் பொறுப்பாளராகவும் பணியமர்த்தினார். இவர் எண்பத்து ஏழிற்கும் மேற்பட்ட நூற்களைப் பதிப்பித்துள்ளார்.

இவர் 1924இல் பதிப்பித்த பாஷ நாடகத்திற்காக ‘மகாமகோ பாத்தியாய’ எனும் பட்டமும், ஜெர்மனியில் உள்ள டுபிங்கன் பல்கலைக்கழகம் ‘முனைவர்’ பட்டமும் அளித்துச் சிறப்பித்தன. இதே ஆண்டு ‘மலையாளப் பொறுப்பாளர் நிறுவனம்’ தொடங்கப்பட்டு, முதல் பொறுப்பாளராக உள்@ர் S. பரமேஸ்வரன் ஐயர் பணியமர்த்தப்பட்டார். இவர் பல்வேறு சுவடிகளை ஆராய்ந்து எழுதிய மலையாள இலக்கிய வரலாற்றுக் கையெழுத்துப் பிரதிகள் இன்றளவும் நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

1938இல் இந்த இரண்டு நிறுவனங்களும் கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, ‘கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் நூலகம்’ என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1966இல் ‘கீழ்த்திசைச் சுவடியியல் நூலகம் மற்றும் ஆய்வு நிறுவனம்’ என்ற பெயரையும் பெற்றது. இறுதியாக கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம் வளாகத்தில் 1982இல் அரண்மனை வடிவில் கட்டப்பட்ட இந்நூலகத்திற்குச் சுவடிகள் கொண்டு வரப்பட்டு இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து 1982இல் இத்துறையின் இயக்குநராகப் பணியாற்றிய இராகவன் பிள்ளை அவர்களின் முயற்சியால் வடமொழி முனைவர்பட்டப் படிப்பும், பின் தமிழ் முனைவர் பட்டப்படிப்பும், மலையாள முனைவர் பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டன.

**சுவடிகளின் பொருண்மை வகைப்பாடு**

இங்கு வேதம், மந்திரம், இலக்கணம், தந்திரம், மருத்துவம், ஜோதிடம், புராணம், சங்கீதம் போன்ற பொருண்மைகளில் ஓலைச்சுவடிகளும், காகிதச் சுவடிகளும் காணப்படுகின்றன.

### எழுத்து முறைகள்

மேற்கண்ட பொருண்மைகளில் அமைந்த ஓலை மற்றும் காகிதச் சுவடிகள் வட்டெழுத்து, கோலெழுத்து, மலையாண்மா, தேவநாகரி, நந்தி நாகரி, அரபிக், பர்மிஷ், கிரந்த எழுத்து, நேவாரி, ஆங்கிலம் முதலான எழுத்து முறைகளில் எழுதப்பட்டுள்ளன.

### மொழி

தமிழ், மலையாளம், சமஸ்கிருதம், கன்னடம், பர்மிஷ், ஹிந்தி, ஒரியா, குஜராத்தி, மராத்தி, ஆங்கிலம் முதலான மொழிகளில் எழுதப்பெற்ற ஓலை மற்றும் காகிதச் சுவடிகள் இங்குக் காணப்படுகின்றன.

### எழுதுபொருட்கள்

ஓலை, செப்பேடு, துணி, பேப்பரஸ், பு+ர்ஜபத்ரம், அகருமரத்தோல், யானைக்கொம்பு, கையால் செய்யப்பட்ட காகிதங்கள், பழங்கால எழுதுபொருட்கள் போன்றவை இங்குக் காணப்படுகின்றன.

### இதழ்கள்

இத்துறையில் ஆண்டுதோறும் *'Journal of Manuscript Studies'* எனும் ஆங்கில மற்றும் சமஸ்கிருத இதழும், 'பிராஜீன கைரளி' எனும் மலையாள இதழும் வெளிவருகின்றன. இவை பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதழ்களாகும்.

### பராமரிப்பு

இங்குள்ள ஓலைச்சுவடிகள் இரண்டு முறைகளில் பராமரிக்கப்படுகின்றன. ஒன்று பாரம்பரிய முறை, மற்றொன்று நவீன முறை.

#### பாரம்பரிய முறை

கட்டிவைக்கப்பட்ட சுவடிகளை அவிழ்த்து, பொடி நீக்கி, கற்பு+ரப்புல் எண்ணெய் தேய்க்கப்படுகிறது. மற்றும் கற்பு+ரப்புல் எண்ணெய்யும் ஐசோபுரொபைலும் சரிவிகிதத்தில் எடுத்துத் தேய்க்கும் முறையையும் பின்பற்றுவதோடு, சுவடிக்கட்டுகள் இருக்கும் அறைகளில் சிவப்பு துணியில் கற்பு+ரம் சேர்த்துக் கட்டிவைக்கப்படுகிறது. காகிதச் சுவடிகளுக்கு இடையே பாம்பின் தோல் வைத்திருப்பதால் அவை நீண்ட நாள் அழிந்து போகாமல் இருக்கின்றன.

#### <u>நவீனமுறை</u>

ஓலைச்சுவடிகளை மின்படிவங்களாகச் சேகரிக்கும் முறை விரைவில் பின்பற்றப் பெறவுள்ளது.

### அரியவகைச் சுவடிகள்

- இத்துறையில் 611 ஓலைகளைக் கொண்ட தமிழ்ச்சுவடியான 'கந்தபுராணம்' அதிக ஓலைகளைக் கொண்ட சுவடி எனும் பெயர் பெருகின்றது.
- எண்ணிக்கையில் ஆறு ஓலைகளை மட்டுமே கொண்ட வைத்தியச் சுவடி மிகவும் சிறிய சுவடி எனும் பெயர் பெறுகின்றது.
- 67 செ.மீ உடைய 'ஜாதக பல விசேஷ நிரூபணம்' மிகவும் நீளம் கூடிய சுவடியாகும்.
- AD 1521இல் மலையாள மொழியின் முதல் வடிவமான ஆரிய எழுத்தில் எழுதப்பட்ட 'தெய்வாகமம் பாஷ' எனும் சுவடியே மிகப் பழமையானது.

- *AD 1390*இல் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட சாமவேதத்தின் ஒரு பகுதியான யாகத்தைக் குறிப்பிடும் 'ஊக கானம்' எனும் பெயரிலான சுவடி காகிதச் சுவடிகளில் மிகவும் பழமையானது.
- மகாராஷ்டிராவில் இருந்து கிடைக்கப்பெற்ற *300* ஆண்டுகாலப் பழமையான 'சித்திர மகாபாரதம்' காகிதச் சுவடியானது, மகாபாரதக் கதையை மராட்டி மொழியில் விளக்குகின்றது. இச்சுவடியில் தங்கமுலாம் பு+சப்பெற்றுள்ளது.
- *AD1522*இல் எழுதப்பட்ட 'அத்யாத்ம இராமாயணம்' எனும் சுவடியானது இராமாயணக் கதையை *98* ஓலைகளில் *318* வரைபடங்களாக விளக்குகின்றது. இதனை அவ்வாறே புத்தக வடிவமாக்கியவர் விஜயன் ஆவார்.
- 'இந்தோனேஷியன் சித்திர இராமாயணம்' இராமாயணக் கதையை இந்தோனேஷியன் மொழியில் ஆங்கில எழுத்துப் பயன்படுத்திப் படங்களுடன் விவரிக்கின்றது.
- 'சிவலிங்காங்க சாசனம்' எனும் தந்திர சுவடியில் இரண்டு ஓலைகளை ஒட்டிவைத்தால் மட்டுமே பொருள் புரியும் வண்ணம் படம் வரையப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் மணலிக்கரை மடத்திலிருந்து கிடைக்கப் பெற்ற 'ஆர்ய மஞ்சுஸ்ரீ மூலகல்பம்' எனும் புத்தமதச் சுவடியானது, 'சீதாளம்' எனும் ஓலையில் 'நேவாரி' எழுத்துமுறையைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது.
- திருவிதாங்கூரின் அரசராக இருந்த ஸ்ரீமூலம்திருநாள் அவர்களின் 'சங்கீத நூல்கள்' இங்கு உள்ளன.
- 'சாமுத்திரிகா லக்ஷணம்' எனும் தமிழ்ச்சுவடியைப் படியெடுத்தவர் ஓலையின் ஒரு பக்கம் 'முப்பது' வரிகள் வருமாறு எழுதியுள்ளார். இதனை நுண்ணோக்கியைப் பயன்படுத்தி மட்டுமே வாசிக்க முடியும்.
- 'அக்ஷரப்ரஷ்ணம்' எனும் ஜோதிடச் சுவடியின் ஒரு பக்கம் இராமாயணப் பாடல் வரிகளும், அதன் மறுபுறம் அச்சுவடியின் ஓலையைத் தேர்ந்தெடுப்போரின் பலன்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பல காகிதச் சுவடிகளில், இலைச்சாறு போன்ற இயற்கையாகக் கிடைக்கக் கூடிய நிறம் பயன்படுத்திக் குதிரைகள், பகவத்கீதை படங்கள் போன்றவை வரையப்பட்டுள்ளன.
- சுவடி எழுதுவதற்காகத் தயாரிக்கப்பட்ட ஓலைகளின் இருபுறமும் மரப்பலகைகள் வைத்துக் கட்டப்படும். இவற்றிற்கு மாறாக யானைக் கொம்புகளில் திருமாலின் உருவம் மற்றும் இயற்கை நிறப்பு+ச்சுச் செய்த சுவடிகளும் இங்குக் காணப்படுகின்றன.
- *AD 1770*இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முன்சிறமடத்தின் குடும்ப விவரங்கள் எழுதப்பட்ட செப்பேடுகள் இங்குக் காணப்படுகின்றன.
- *AD 1674*இல் வட்டெழுத்தில் எழுதப்பெற்ற 'இராம சரிதம்' என்னும் சுவடியானது மலையாள மொழிக்குச் செம்மொழித் தகுதி கிடைப்பதற்கு முக்கியக் காரணமாக இருந்துள்ளது.
- ஓலைச்சுவடிகளை வட்டமாக வெட்டி ருத்திராட்சம் போல நூலில்கட்டி வடிவமைக்கப்பட்ட சுவடியில் 'தேவி மகாத்மியம்' *11*ஆவது பகுதி எழுதப்பட்டுள்ளது.

**வெளியீடுகள்**

இத்துறையின் பதிப்புகள் அனைத்தும் *Trivandrum Sanskrit Series, Trivandrum Malayalam Series, Trivandrum Tamil Series* மூலம் வெளிவருகின்றன.

**வடமொழிப் பதிப்புகள்**

- அத்வைத சாதக - *T.*பாஸ்கரன்
- இராமாத்யுதயம் - *P.*விசாலாக்ஷி

- புூர்வபாரதம் சம்பு, முஷிகவம்ச - *K.*இராகவன் பிள்ளை

**தமிழ்ப் பதிப்புகள்**

- இராமாயணத் திருப்புகழ், நன்னூல் புதுவுரை, கீதாசாரத் தாலாட்டு - ஓ.பத்மகுமாரி

**மலையாளப் பதிப்புகள்**

- பாடகதாமாலிகா - *N.* சாம்
- வாதில்துறபாட்டுகள் - *P.K.*சுமதிக்குட்டி
- கோபால லீலாமிர்தம் கம்ச பாட்டு - *K.G.*ஸ்ரீலேகா
- நளசரிதம் மணிப்பிரவாளம் - *M.*ஸைனபா
- மருந்துகளும் யோகங்களும் - ரஜனி *R.S*

**அட்டவணைகள்**

இங்குள்ள சுவடிகள் அனைத்தும் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

**வடமொழி**

வடமொழிச் சுவடி அட்டவணை - *Vol : 1 - 7*

**தமிழ்**

தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை : 1-3 பத்மநாபன் தம்பி, மற்றும் ஓ.பத்மகுமாரி

தமிழ்ச் சுவடிப் பெயர்கள் -ஓ.பத்மகுமாரி

**மலையாளம்**

மலையாளச் சுவடி விளக்க அட்டவணை - *Vol : 1*

மலையாள அட்டவணை - 1

இத்துறையில் பதிப்பிக்கக் கூடிய நூல்கள், இதழ்கள் மற்றும் ஓலைச்சுவடி அட்டவணைகள் கேரளப் பல்கலைக்கழகத்தின் பதிப்பியல் துறையில் கிடைக்கும்.

**சுவடியியல் - விருப்பப் பாடம்**

பிற துறைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது விருப்பப் பாடமாகச் சுவடியியலைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுக்கும் சுவடியியல் துறையின் முன்முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் வட்டெழுத்து, கிரந்த எழுத்து, தமிழ், மலையாளம், பிராமி முதலான எழுத்து முறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**கையெழுத்துப் பிரதிகள்**

வடமொழி மற்றும் மலையாள மொழிகளில் சிறந்த கவிஞர்களாகக் கருதப்படுகின்ற கணபதி சாஸ்திரிகள், உள்@ர் *S.*பரமேஸ்வரய்யர், வள்ளத்தோள் நாராயண மேனோன், குட்டிக்கிருஷ்ணனார், *T.*கோவிந்தபிள்ளை, கேரளவர்மா வலியகோயித் தம்புரான், சர்தார் *K.M.* பணிக்கர் ஆகியோர் படைப்பின் கையெழுத்துப் பிரதிகளும், தமிழ்ப் புதின ஆசிரியரான அ.மாதவனின் ‘கிருஷ்ணப் பருந்து’ புதினத்தின் கையெழுத்துப் பிரதிகளும் இங்கு காணப்படுகின்றன.

**<u>விருதுகள்</u>**

- இந்திய அரசால் 2007இல் ‘ஆர்யமஞ்சு ஸ்ரீ மூலகல்பம்’ எனும் சுவடிக்காக ‘*vijnananidhi*’ பட்டம் கிடைத்துள்ளது.
- *Bhashakkoru Dollar - K.G.* ஸ்ரீலேகா அவர்களுக்கு சிறந்த நெறியாளர் விருது.
- *Malayalabhasha Parishath - M.*சைனபா அவர்களுக்கு ‘சி.வி. இராமன் பிள்ளை’ நினைவு விருது.

- *Bhashakkoru Dollar* - ஸஜினா, மாயா.K.S. ஆகியோர்க்குச் சிறந்த ஆய்வேட்டிற்கான விருது.

**நிறைவுரை**

நீண்ட வரலாற்றைக் கொண்ட கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் நூலகச் சுவடிகள் பல்வேறு அரண்மனைகள், குடும்பவீடுகள், தனிநபர் போன்றோர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். இத்துறையில் உள்ளோர் இன்றளவும் சுவடி சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வுகளையும் பல்வேறு இடங்களுக்குச் சென்று செய்து வருகின்றனர்.

**துணைநின்றவை**


1. *Journal of Manuscript Studies - Vol : XXXI and XXXII*
2. *Thalakshara -2018 - M.சைனபா*